1185

ஸ்ரீராமஜெயம்.

சம்பூர்ண

# இராமாயணம்

நொண்டிச்சிந்து.

சென்னை ப்ரக்ரசிவ் யூனியன்பாடசாலை உபாத்தியாயர்
சிட்டளப்பாக்கம்-பாலகிருஷ்ண பிள்ளை
அவர்களா லியற்றியதை,

மயிலை - கன்னியப்பமுதலியா ரவர்களால்,

சென்னை - சூளை,
ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.
1922.

ரிஜிஸ்டர் காப்பிரைட். [அணா 2.

O-, IMBP;5
N22.
180290

## கூந்த வளரும் பரிமளத் தைலம்.

இந்த சந்திரகாந்தா கூந்தல் வளரும்பரிமளத் தைலம் அனேக திவ்விய வன மூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதன்பரிமளம் இன்று மலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலை நீளமாகவளரச் செய்யும் மூளையின் கொதிப்பு தணிந்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பலநோய்களையும் நிவர்த்திசெய்து கண்களில் நீர்வடிதல் தலையில்சுண்டு, புண், மயிர்வெடிப்பு மயக்கம், தலை சுற்றல், வலி, சொரி, சிரங்கு மனோ வியாகூலம் ஆகிய இவைகளை போக்கடித்து திரேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

டின் 1-க்கு ரூபா 1 0 0

### 5½-முழ நிகளம் 2½-முழ அகலமுமுள்ள

## அசல் ஜப்பான் பட்டு குட்டைகள்.

நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டு குட்டை வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைபோக்காமல் இன்றைக்கே எழுதுங்கள்செல வழிந்துவிட்டபின் 10-ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டை கிடையாது என்பது உண்மை! உண்மை!! முக்காலும் உண்மை மிகவும் நேர்த்தியான பளபளப்போடும்கூடிய பட்டினல் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளவும் கமிஸ் கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும் ஸ்ரீகள் மேலுக்காகவும் சிறு பெண்களுக்கு தாவணியாகவும்உபயோகிக்கலாம்.

குட்டை 1-க்கு ரூபா 3 8 0

## சர்வதேள் விஷ நிவாரணி.

நிமிஷத்தில் அழுதவன் சிறிப்பான்.



இதை மருந்துடன் அனுப்பும் டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்ததால் விஷந்தீண்டிய 5-நிமிஷத்திற்குள்ளாக தான் வருத்தப்பட்டு சகிக்கக்கூடாத துன்பத்தில் நின்று மிகவும் ஆச்சரியப்படத்தக்கதா யிருக்கும்.

2-வித மருந்து அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8.

---

எமது கம்பெனியின் பலவிதசாமான்கள் அடங்கிய பெரிய கேட்லாக் தேவையானவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்

ஸ்ரீராமஜெயம்.

சம்பூர்ண

# இராமாயணம்

## நொண்டிச்சிந்து.

(library stamp)

### விருத்தம்.

பாரினில்மிக்கதான பண்புளவயோத்திநாதன்
சீரதாயரசுசெய்தும் சிறுவனில்லாததாலே
கோரியேவசிஷ்டன்றனைக் கொப்பெனவணங்கியேற்ற
யீரியேசெயுமகத்தில் மீண்டிடுமிராமன்காதை
பாரதிகேள்வன்றந்த பரிவுளவருளாலன்று
நாரதர்வான்மீகற்கு நவிலக்கேட்டியற்றுபாருய்
தார்புனைவாணிபாதம் தன்னையென்சிரமேற்றாங்கிக்
கூரிடக்கேட்போர்நேருங் குறையதுமன்னிப்பாரே.

### நொண்டிச்சிந்து.

தனனம் தினதனனம்—தனனம்
தனனம் தனனம் தனதனனும் தன

## பாலகாண்டம்,

ஆதியில்மறைமுதல்வன் ஆனதோ
ரன்பனிலக்குமியோ டந்தப்புரத்தில்
தீதிலா துறங்கிடவே நேர்ந்தபோது
தேடிஜயவிஜய நாமிருவரை
நாடியழைத்து வளவில் ஒருவரும்
நாடாவிதமிருக்கப் போடாவென்று
உரைத்திடக் கேட்டவரும் விரைவினி
லோடிதுவாரமதை நாடிடவே

சனகசனந்திகளாம் இருவர்
சார்ந்தவிதியளிக்க நேர்ந்தவரை
காவலர் தடுத்திடவே அவர்கள்
கடவுளடிகாணவவர் தடைசெய்ததால்
பிடியுங்கள் சாபமெனவே வந்தவர்
பிடிலதோர்சாபமதை நாடியளிக்க
பயந்தவர் நாதனிடம் சென்றுமே
பரிவுடனேநேர்ந்ததனை யறியவுரைக்க
நாரணனதையறிந்து காவலரை
நலமுடனேயவரும் பலன்பெறவே
அடைந்தபிரவி யேழில் எனக்
கன்பாயிருந்துநீரு மின்பமுறலாம்
மூன்றுபிரவியெனிலோ மிக்க
மூர்க்கமாயிருந்துவெகு சீக்கிரத்திலே
அடையலா மெதுவேண்டும் நன்று
யளிப்பேனுரையதனை களிப்புடனே
என்றுரைசெயவவரும் ஸ்வாமி
இமிகலாயிருந்ததிங்ன் றகன்றிடவே
தாரும்வரங்களெனவே அவரும்
தந்தேனவ்விதமேநீர் முந்திடீரென
காசிபர்சுதனாக திருதரில்
கழருமிரணிய னிரணியாக்கதன்
எனவந்துதித்தா ரவரை நந்தனு
மேகிப்ரகலாதன்முன் பாகவதைக்க
மறுபடியிருவருமே புவியில்
மாவீரன்கும்பகர்ண னிராவணனென
வந்துஜனித்துப்பலரை யவர்கள்
வாதுசெயவேகிவெகு தோதகமுடன்
வனத்தில்வாழ் முனிவர்களை பலவாய்
வந்துசெயுந்தொந்திரவை சிந்தையிலெண்ணி
[illegible]தனை யெவரும்
மதித்து[illegible]விதமாய் துதித்தனரே

பூபாரஞ் சகியா தேவியுமே
போகிவிகிஞ்சணிட மேகியுரைக்க
அனைவருமொருங்காக கூடி
ஆர்வமுடனேகியந்த பார்க்கடலிலே
யோகநித்திரை புரியும் நாதனிடம்
ஏகியவர்கள்பல வாகவுரைக்க
தயரதன்புதல்வருக்காய் வசிட்டரை
தர்வியுரைசெயக் கேட்டேகியவரும்
மகமொன்றியற்றவதனில் வந்துதித்து
மாதவரேநீரடையும் தீதுகளெல்லாம்
போக்கவருவோ மென்றார் அதனை
புந்தியிலறிந்தவரும் வந்தடையவே
வசிட்டருமியாகமதற்காய் பலபல
வாருநினைந்தாரரசன் சீருபெரவே
மாதர்கள்பலபேரை சேர்த்து
மங்கைகாளேகியொரு சங்கையின்றியே
கலைக்கோட்டுமாமுனிமுன் னேகியொரு
நிலையாயிருந்தரசன் பலன்பெறவே
கூட்டிவருவீரென்றார் ஏகியவர்
கொடியவனமதனில் மிடியகற்றி
நாடியவர்கள்பலவாய் முனியும்
நாட்டமுறச்செய்தவரை மீட்டுவரவே
புத்திரகாமேஷ்டி யாகமொன்று
புரிந்தாரவர்மனது பரிந்திடவே
பொற்பாத் திரமொன்றை பூதமொன்று
பொருந்துமார்பிலணைத் தருந்துமெனவே
பாயசமதையளிக்க அரசரும்
பார்த்ததனைப்பெத்தவருமாந்தியுடனே
மனைவியர்களுக்கிய வாங்கியவர்
மனமகிழ்வாகவவர் கனம்பெறவே
பருகிடதசமதியம் — போக்கிசதூர்
பாலரையுயிர்த்தாரவர் சாலமகிழ்வாய்

ஆருயிர் தனைப்போலும் மக்களை
ஆதரித்துத்தசமதியங் காதலுடனே
ஐந்துவயதானவுடனே மக்களும்
ஆர்வமுளகல்விபல வோர்தலடைய
விஸ்வா மித்திரரும் வனத்தில்
வேழ்வியொன்றியத்தவது தாழ்மைபெறவே
தாடகையெனு மரக்கி யாகமது
தாழ்வடையும்வாறியற்றக் கீழ்மையுறவே
முனிபலவாய்நினைந்து முடிவில்மன்னன்
மூத்தமகனேயிதனை யாத்துவானென
தசரதரிடமணுகி நீருமிப்போ
தாரும்மகவையெனக்குச் சீறுபெறவே
என்பதைக்கேட்டரசர் மனத்தில்
எப்பவுமில்லாததுயர் கப்பிடக்கண்டு
வசிட்டமுனியுமணுகி அரசேநீர்
வாதுபுரிவதும்பொருந் தாதுவுடனே
சீராமச்சந்திரனை யவருடன்
சீக்கிரமனுப்பிடினன் மார்க்கமடைவான்
என்றுரைசெய வவரும் ராமனை
எகுமெனத்தம்பியுடன் போகவவரும்
மகம்புரியிடமணுக தாடகையும்
மார்க்கமிலாவாகுபெரு மூர்க்கமுடனே
வரஜெயராமனறிந்து முனியேயிதோ
வருபவளைப்பாருமிகப் பொருமையுடனே
எனக் கவுசிகரறிந்து ராமனிடம்
இவளே தாடகைவே ரா.வளல்ல
கொஞ்சமுமஞ்சாது கறத்துன தோர்
கோடுகணையால்வதைத்துக் கீடுசெய்யென
கணையைத்தனுசில் தொடுத்து தாடகையும்
காலனுலகேகக்கண்டு சாலமுனிந்து
மாரீசன்முதலாம் நிருதர்பலர்
வந்துகணையால்மெலிந்த கன்றிடக்கண்டோர்

கவுசிகர் தனைவிளித்து ராமனுக்கு
காதலோடுமந்திரங்க ளோதுமெனவே
தபமகிமையாலடைந்த யாவையும்
தந்திடவேகண்டவரும் சிந்தைகளிக்க
பலபல சரித்திரங்கள் அம்மக்களுக்கு
பரிவாயுரைத்தனர் பிரியமுடனே
ஜனகனளித்தவோலை வாங்கிமுனி
சார்புடனிராமனுக்கு ஆர்வமுடனே
அளித்தபின் மூவருமாய் மிதுலைநகர்
அகலும்வழிதன்னில் கல்லாகிக்கிடந்த
அகலிகை சாபமதை ராமனு
மாத்தியொடுபாததூளால் நேர்த்திபெறவே
ஏதுகாரணமென்றூர் கோசிகனு
மெடுத்துரைசெய்தவளை யடுத்துடனே
கௌதமரிடமேகி அகலிகையை
காக்ஷிபெறவேயளித்து தாக்ஷியின்றியே
போகும்வழியதனில் விசித்திரமாம்
போதனைசெய்தாரதனை யோதவறிந்து
நாடிமிதுலை நகரை பலரும்
நாணமுறவேதனுவும் கோணல்பெறவே
உரைத்திடச் சனகருமே கண்டிதை
ஓடிவந்துராமனையே நாடியணைத்து
தசரதர்தமை யழைத்து அவர்முன்
தந்தனர்சீதையைராமச் சந்திரனுக்கு
ஊர்மிளை யெனும்மகளை அனுஜனுக்
குதவினர்மாண்டவியை பரதனுக்கு
சத்துருக்கன் றனக்கு சார்சுருத
கீர்த்தியைத்தரவெகு ஆர்த்தியுடனே
சகலஸ்த் சிதனங்கள்தர வாங்கியவர்
சாரும்வழியில்பரசு ராமன்வரவே
எதிர்த்தவன் தனுவளைத்துக் கணையது
வேகும்வழியேதுபுகல போகவெனவே
தான்செய் தவப்பலனை ராமனுக்கு
தந்தனனதையறிந்தோர் சிந்தைமகிழ

1802

# அயோத்தியா காண்டம்.

வந்தயோத்தியை யடைந்து சிலவருடம்
வாழ்ந்துதசரதர்பலம் தாழ்ந்திடக்கண்டு
ராம னுக்குமகுடம் சூட்டவென
நாடியுரைக்கவமைச்சர் கூடியேநின்று
தகுமோசனைசெய்தீர் வசிட்டரால்
தாருமுமதுமனம் சீர்மைபெறவே
என்றுரைசெய்வதனை கேட்டு
யீடில்லாமந்தரையு மோடிவிரைவாய்
கைகேயினுக் குரைக்க அவளும்
கண்ணினுமினியனுமவ் வண்ணனுக்கிய
என்றுதன்னார்மளிக்க அதையவ
ளேர்க்காமல்போடீதுன் மார்க்கியென்று
அநேகமா யவளுரைக்க கைகேயி
அப்படியேநல்லதுநா னெப்பினேனென்று
தயரதனனுகிடவே யவனும்
தாட்டியிலாநாட்டமுட னீட்டிகிடக்க
பலவிதம் வேண்டியவளை மன்னனும்
பாரில்நீகிடப்பது சீரதல்லவே
எனவே கைகேயிகேட்டு எனக்குமுன்
னீந்திடுவரமளிப்பீ ரேந்தலேயென
தந்தனனெழுந்தீரென அவளும்
தாட்டியுடன்ராமனைக் காட்டோட்டிபரதன்
நாட்டினையாள விதமாய் அபிஷேகம்
நாடிச்செயவேணுமென பேடியுரைக்க
அம்மொழிதனைக்கேட்டு அரசர்
எப்பையுமில்லாததுயர் கப்பிவிடவே
தரையினில்விழுந்தரசர் தன்சொல்குணம்
தாராதாலேயவன்சொல் மீராமலே
சுமந்திரன்றனையழைத்து ராமச்
சந்திரனையழைத்ததாய் முந்தியுரைத்து

அழைத்தோடிவாருமெனவே அமைச்ச
ரதிதுரிதம்கடந்து விதியறியா
கைகேயியெனைவிளித்து உந்தனை
கடுகிலழையுமென முடிகினதால்
போவோம் வருவீரென்றார் ராமனும்
பொன்முடிதரிக்கவெண்ணித் தன்மனதிலே
எதுகினைந் தழைத்தா ரெனவே
எண்ணியேபலவிதமாய் நண்ணினானங்கு
அப்பா சீராமனேயுனை அடவிக்
கியவேயகலச்சொல்லென் றெப்பியுரைத்தார்
ஏகிநீ பதினான்காண் டிருந்துபின்
னிங்குவரிலாசையொரு சங்கையின்றியே
அடையலாமெனவுரைத்தார் அதுவரையி
லாள்வான்தம்பிபரதன் தாழ்விலாமலே
என்னவேராமன் திரும்பி தனது
அன்னையிடமேகியிதைச் சொன்னவுடனே
அனைவருந்துயர மடைந்து இப்படி
யானதென்னகாரணமோ ஊனமடைய
என்றன்னை புலம்பிடவே சீதையு
மேந்தலேயெனையுங்கொண்டு போந்திடென்னவே
நன்றல்லவேமானே பலவாம்
நாயுடன்புலியறியு மேயும்வனத்தில்
என்னுடன் நீவருதல் மாதே
ஏற்றதல்லதாயடியை போற்றியிருப்பாய்
எனவுரைசெய வவளும் நின்று
என்னைவிடலுந்தனுக்குப் பின்னமல்லவோ
நீரில்லாவரமனையும் எனக்கு
நெடியகானிலுமிகக் கொடியதேயென
எத்தனை யுரைத்திடினும் மாதேயுன்
சித்தமதுஎவ்விதத்தும் நத்திடாதாலே
நல்லதவ்விதமேசெய் யெனவவரும்
நாடியுரைசெயவனுஜ ஞேடியேவந்து

நானுமுடன்வருவேன் அதைச்சற்
றேனுந்தடையின்றி யெங்கோனேயழைத்து
போமெனவுரைத்திடவே அழைத்துப்
போதலரிதானபல வாதுபுகன்றும்
ஒன்றும்பலனிலதால் தம்பிநீயும்
உடன்வருவாயதிலோர் தடையுமில்லை
என்றவருரைத்திடவே மூவரும்
ஏகியேகைகையின் முன்பாகவரவே
கைகையு மிதையறிந்து நீங்கள்
கட்டியிருக்குமுடைக ளொட்டுமகற்றி
மரவுரிதனையுடுத்தி வனமேகு
மார்க்கமறிந்தேகும்வெகு சீக்கிரத்தென்று
சொன்னவுடன்சுமந்திரனும் கொணர்ந்த
சின்னரதமேரியக லன்னிளமயிலே
ஊரிலுள்ளார்பலரும் வருதலைச்சற்
றோராமலேயொன்றும் பாராமலே
துரிதத்தில் போக்குமெனவே பரியை
துரத்தினன்கங்கைக்கரை யுரத்தலுடனே
தந்தையுமிதையறிந்து தனது
ஆவியிழந்தார்கைகை பாவியின்முன்னே
அடவிசெல் மூவருமே ரதமிரங்கி
அன்பரேநகரணுகி இன்பமுடனே
தந்தைதாய் முதல்பலர்க்கும் என்க்ஷேமந்
தன்னையுரைசெய்யுமொரு பின்னமின்றியே
என்றுரைசெய வவரும் பலவா
யேக்கமுத்தாரந் நோக்கமறிந்து
குகன்வந்தமையணுகி யாவுமறிந்து
கொணர்ந்தார்படகையொரு கணந்தனிலே
அக்கரைதனில்சேர்க்க அவர்க
ளொக்குமொழியாலேபல பக்குவஞ்சொல்லி
பரத்வாச ரகமேகி வந்தனம்
பலவாய்ப்புரிந்தாரவரின் செலவாலே

சித்திரகூடமதை மூவரும்
சேர்ந்தார்மனதிலொன்று காந்தலின்றியே
அவ்விடந்தனிலனுஜன் பர்னசாலை
அமைக்கவசித்திருந்தார் சமர்த்துடனே
சுமந்திரனுடேகி கைகையுடன்
சொன்னவுடன்சேதியெல்லாம் நன்னயமதாய்
அன்பாய் கேகயபுரியை அமைச்சரே
ரணுகிபரதனை யழைத்துவருவீர்
என்றுரைசெய வவரும் சத்ருக்கனை
டேகிகேகயன்முன் பாகவணுகி
அழைத்திடபரதனுமே மனதினி
லாகாசொப்பனம்பல வாகவறிந்து
ரதமதில்தம்பியுடனே சுமந்திரு
மிரவினிலெவ்விடமு மிராமலகல
அபசகுனங்கள்பலவாய் பரத
னறிந்துவயோத்திவெகு துரிதத்திலே
வருகவயோத்திநகரம் எந்த
வண்ணமுமிலாமலது குன்னிடக்கண்டு
துயரம்பலவடைந்து பரதன்
துரிதமாயன்னையிடம் பரிவாயணுகி
க்ஷேமங்களை வினவ கைகையும்
சேதிபலவோதிடவே காதலுடனே
பரதனுமிதைக்கேட்டுத் தாயினை
பலவாயிகழ்ந்தவனும் நலமுறவே
கோசலை சுமத்திரையை கண்டு
குனிந்துக்குனிந்தவரைப் பணிந்துநின்று
அண்ணனைக்கொணர்வேனென பலவா
யறியவுரைசெயவவரும் பிரியமுறவே
தந்தைக்குச்செய்கடனை பரதன்
தம்பியுடனேயிருந்து சம்பிரமதாய்
முடிக்கவசிட்டரணுகி யவனை
முடிபுனைந்தரசன்சொல் பிடியுமென
அண்ணனைக்கொணராமல் நானிவ்
வரசிலமர்தலொரு அழகலவென்

றன்னைகள் மூவருடன் வசிட்டரு
மனுகவிரைந்தகன்று வனமேகி
கங்கைக்கரையையணுகி குகனைக்கண்
டெங்கேயண்ணன்புகலோர் சங்கையின்றியே
என்றவர்கேட்டிடவே குகனவர்க
ளேகினவகையணைத்து மாகவுறைத்து
அவர்களுடனே தானு மிருப்பினைவிட்
டகலவவரெலா மோரிகளுடனே
பரத்வாசரகம்நாடி யவரும்
பரிவாய்த்தரும்விருந்தைப் பிரியமுடனே
உண்டபின் சித்திரகூடம் யேகி
யுத்ததும்பரதன்தன் வருத்தமுடனே
அண்ணனை நினைந்தலரி வெகுவாய்
அழுததுமவனடி தொழுததுங்கண்டு
அனைவருஞ்சோகமோடு வனத்தி
லலைந்துசித்திரகூட மணுகிடவே
இலக்ஷ்மணனிதையறிந்து ராமனிட
மேகியிவையணைத்து மாகவுரைத்து
கொல்வேன்விடைகொடென் தம்பிநீ
கோபங்கொள்ளவேண்டாமனு தாபமுடனே
நம்மையழைத்துச் செலவே பரதன்
நாடிவருகிறுனோர் கேடிடாமலே
என்றுரைசெயபரத னவரிருக்கு
மிடமதையறிந்தவனு னடந்துடனே
ஓடியண்ணனைப்பணிந்து பரத
னுத்ததையணைத்துமறி வித்திடராமன்
ஓவென்றலரியவனும் தந்தை
யுத்திடுவாரென்றுவனம் நத்திவந்தேனே
என்றவர் பலவாருய் துயரமுற
ஏற்றலரெல்லோருமொன்ருய் சேர்த்தணைத்துமே
நாட்டினைப்போலவனத்தில் பலதுயர
மோட்டியழவேயதனைக் கேட்டனரெலாம்
அண்ணன்றனைப்பரத னயோத்தியினை
ஆளவருவீரென்றவன் மீளவுரைக்க

சென்னை-600 ... பரதனுக்கும்.

போகாவிதமனைத்தும்
புகன்றவன்கேட்டபடி தகைவின்றியே
அளித்தனர்பாதுகையை பின்னவர்க
ளனைவருமவ்விடம்விட் டகன்றனரே
அத்திரிமுனியினகம் மூவரு
மடைந்திடக்கண்டவனு சூயாதேவியும்
பலபலவிதமாக சீதையை
பார்த்துரைசெய்வதற்கு மாந்துரைத்தபின்

# ஆரண்யகாண்டம்.

தண்டகாவனமடைந்தார் அங்கு
தகைபெறுமாசிரமந் தன்னையடுத்து
பலரிஷிபூஜனையும் ஏற்றுப்பின்
பாழ்வனமதில்விராதன் வாழ்த்துமிவரை
கண்டதுமோடிவந்து சீதையை
கடுகவெடுத்தகல நடுக்கமுற்று
சீராமன்விசனமுற தம்பியும்
சீக்கிரத்திலேவருத்த நீக்கிவிடவே
வாளியொன்றினையேவ அதனல்
வாட்டமுறாமலவனு மோட்டமாய்வந்து
இருவரையுந்தோளில் அவனு
மெடுத்தகலவேயவருந் துடுக்குடனே
அவன்றனைக் கொலைபுரிந்து புவியி
லடக்கிச்சரபங்க ரிடந்தனிலே
சென்றிடரிஷிகளெலா மிவரை
சேரவறிந்தாசிபல கூரவறிந்து
வேணவரங்களளித்து அவரும்
விரைவில்சுதீக்ஷண ருரையிடத்தை
அடைந்தவராசிதனை யேற்றவரு
மகன்றூரவ்விடத்துளோர் புகன்றிடவே
வைதேகிராமரிடம் அரக்கரை
வதைத்தல்நலமோ அவர்பதைத்திடவே
எனவுரைசெயராமன் அவர்வதை
ஏர்க்குமெனவேபல மார்க்கமுறைத்து

இருடிகள்பலபேரை கண்டு
ஏகினாகஸ்தியர்முன் பாகவன்று
அவரது பூசனையு மேற்று
அகன்றுபஞ்சவடிக்குப் புகன்றிடுமோர்
ஜடாயுவைக்கண்டு தம்பியும்
சார்பாயமைத்தபர்ன சாலையிருந்து
ஏமந்தகாலமதிலே பரதன்முத
லெவரையுமேஎினைந்துக் கவையுடனே
கோதாவரியிலாடி வருகையில்
கொற்றவணைசூர்ப்பனகி நத்திவந்துமே
பலபலவாறுபுகல தம்பியும்
அடைக்கலத்தால்நாசிசெவி துடைத்தனனே
பதினாலாயிரமரக்கர் தம்மையவள்
பார்த்தழைக்கவேயவரைச் சேர்த்துவதைத்தார்
கண்டந்த சூர்ப்பனகை சென்று
கரதூஷணரையும் விரைவிலழைக்க
அவர்களுமாண்டதற்பின் னிலங்கை
யடைந்துராவணனிடம் நடந்தோடி
சீதாராமருடன் லக்ஷ்மணரின்
சேதிவெகுவாயுரைக்கக் காதுகொடுத்து
மாரீசனையடுத்து ராவணனும்
மார்க்கமறிந்தேபுகல்வாய் தீர்க்கமாயென
பலவிதமவனுரைத்தும் கேளாததால்
பத்திவந்துபெண்மானு நத்தியேநின்றார்
சீதையம்மானைநோக்கி நாதாநீர்
சென்றதைபிடித்தெனக் கின்றுதாவென
சீராமனதின்பின்னே விரைவில்
சென்றுவதைசெய்யவது.வன்றுவுரைத்த
சபதம்செவியில்படவே சீதையும்
ஜடுதியிலேகெனவுரை கொடுமொழியா
லனுஜனுமேகிடவே ராவண
னணுகிஜானகியையக் கணந்தனிலே
எடுத்தேகிடக்கண்ட ஜடாயுவு
மெதிர்த்ததனவனை வதைத்திடவே

அரக்கனிலங்கையடைந்து சீதையை
யசோகவனக்காவலி லடத்திட்முன்னம்
வருகையில்ராமனெதிரில் தம்பியும்
வருவதைக்கண்டவர் வருத்தமுடனே
எதுகாரணமெனவே அதனை
யெடுத்துரைசெயில் தகுந்ததல்லவே
என்றிருவருமாக பர்னசாலை
ஏகிசீதையிலா தநேகமாய்நொந்து

# கிஷ்கிந்தா காண்டம்.

பலபலவிடந்தேடி சீதையை
பார்த்திடச்சுகமிலதால் வேர்த்துமேயவர்
ஜடாயுவால் சேதியறிந்து அவருக்குச்
சரமகிரியையவ சரத்தில்முடித்து
அயோமுகியென்னுமொரு அரக்கியை
அங்கங்கெடுத்தகன்று தங்குதலிலா
கபந்தன்கைதனில்சிக்கி வாளினல்
கடுகவதைத்து நலங்ங கொடுக்கவவன்
சீராமனைவிளித்து சுக்ரீவனை
சேர்ந்திடில்சுகமுமக்கு நேர்ந்திடுமென
வரும்வழிதனில் சபரி பலபல
வாருபசாரம்புரிந்துச் சிருபெறவே
பம்பாபுஷ்கரணிபினில் மூழ்கியவர்
பார்த்துவரரிசியம்லையுந் தோத்திடக்கண்டு
அவ்வழிவருகையிலே – சுக்ரீப
னனுமன்றனையனுப்ப வினயமுடனே
சென்றவர்தமையறிந்து அனுமன்
சேர்ந்தபின்னிதுவேவெகு நேர்த்தியெனவே
சுக்ரீவனுடனடுத்து வாலியை
சுருக்கில்கணைதொடுத்து நருக்கியபின்
கார்காலங்கடக்க வானரங்கள்
காதலியைகாணவெகு போதனைசெய்து
வடக்கில்சிலரைவிடுத்து தெற்கினில்
வாயுமகனேடுபல வானரங்களை

ஏவிடவவரேகி ஜானகியை
எங்கெங்குந்தேடிமன தங்கிடாமலே
சுயம்பிரபைதனைநாடி யவளால்
சம்பாதியுரைமொழியைத் தென்பாயறிந்து
தென்கடல்தனைச்சேர்ந்து அங்கு
தேடிவானரமுறைக்க நாடியேநின்று
அனுமா னும்வெகுவாய் யோசனைசெய்
தாரவாரமாகவெகு சீரதாகவே
கடல்மீதெகிரிப்பாய்ந்து மயேந்திரம்
கடந்துஅனுமனதி னிடையில்வந்து
மைநா கம்முதலாம் மலைகளிலே
மார்க்கமறிந்தேயவரு மேற்கவகன்று

## சுந்தரகாண்டம்.

சுவேலமலையையணுகி இலங்கையை
சேரவிலங்கணியை மனமாரவதைத்து
உத்தமியைத்தேடியுங்காணு தனும
னத்தியேயிருந்துபல யுக்திசெய்திட
தசகண்டனும்வரவே ஜானகியுந்
தாட்டியாயுரைத்தமொழி கேட்டனுமனும்
அரக்கனகலவணுகி யெந்த
னன்னையேயடியேன்சொல்லை யுன்னியேநீரும்
கேளுமெனவுறைக்க சீதையுங்
கிட்டியேயவனுரையை யொட்டிவினவி
யாவுமறிந்துசீதை எனக்கு
நாதனளித்ததேது வோதுவாயென
கணையாழியையளித்தான் அதனை
காதலுடனேயணைத்துச் சீதையும்பதில்
சூடாமணியையளிக்க அதனைவாலில்
சுருட்டிப்பிடித்தகன்று முரட்டுத்தனமாய்
அசோகவனத்தையழித்து ராவணனை
அடுத்துஅக்கினிக்கிரை கொடுத்திலங்கையை
அங்கிருந்தோரெகிரில் வடகரை
யடைந்துநேசர்களைத் தொடர்ந்துவந்துமே

மதுவனந்தனையழித்து சூடாமணியை
மன்னனிராமச்சந்திரன் தன்னிடத்திலே
கொடுத்துச்சேதியையுரைக்க யாவுஞ்செவி
கொடுத்துராமனுடனே யடுத்தவரை
ஏகும்வழியைத்தேடி சுக்ரீவனுட
னுகமனதில்பல வாகினைந்தான்
அண்ணன்றனையடுத்து வீடணனும்
வண்ணமொழியநேக நண்ணியுரைக்க
அவன்தூஷணையணைத்தும் செவியி
லடுத்தவனையும்மனம் விடுத்தகன்று
ராகவனடியிடையில் சுகம்பல
வாகவடையலாமெனு போகமுடனே
காவலருடன்விரைவாய் ராமனிருக்கும்
சாலையணுகவனுமா னுலேயறிந்து

# யுத்தகாண்டம்.

அபயாஸ்தங்கொடுத்து சுக்ரீவனுடன்
அவனுக்துணையாய்வர கவனமுடனே
வந்துசேதுபந்தன லணையொன்
றனுமானுலுமுடன் வந்தவராலும்
கட்டிமுடித்தபின்னர் சேனைகளை
கடுவழைத்தெவரு நடுங்கிடவே
ஸ்வேலமலையையடுத்து இலங்கையை
சுத்திச்சுத்திப்பார்த்துதாமும் வெற்றிகொள்ளவே
சேனையைப்பலவாறு யமைத்துச்
சுக்ரீவனையனுப்பவவனும் மனமகிழ்வாய்
இராவணனோ டமர்செய் தங்குபல
வாராயரக்கரைமுன் சீராய்வதைத்து
இந்திரஜித்துசெய்த பல
தந்திரத்தா லிராமாநுஜன் பந்தமுறவே
வயிணரனுமாலே அவைகள்பல
வாராயொழியவொரு மேலாமலே
கும்பகர்னன்முதலா இந்திரஜித்தைக்
கொலைபுரியராவண னிலைகுலைந்துமே

அந்தகனுலகேற வீடணரு
மாகவேணசரம காரியங்களை
பலவாய்முடித்தபின்பு ராமரவர்க்கு
பட்டங்கட்டிவைதேகியை திட்டமுடனே
அழைத்துப்புஷ்பகமதனி லெவர்களையு
மமைத்துமேகிய யோத்திநகரை
அடையவரும்வழியில் பரத்வாச
ரளித்தவிருந்தைமன்ங் களிப்பாயுண்டு
அயோத்திநகரையடைந்து பரதனை
ஆதரித்துமேமுடி தரித்துநின்றுமே
பதினோராயிரமாண்டு உலகமெலாம்
பற்றிடும்விதமரசை நத்திப்புரிந்து
வைகுந்தமடைந்தார் அதையறிந்து
வையகத்தோரெல்லாம் பக்திசெய்ய
அவரருள்தனையடைந்து எவரும்
அண்டினாரவர்பதத்தில் சண்டமின்றியே

தனனம் தனதனனும் தனனம் தனனம்
தனனம் தனதனனும் தனனம்

விருத்தம்.

பரிவுடனிராமகாதை பக்தியாய்படித்தோர்கேட்டோர்
நெரியுடனவர்பாதத்தை நேர்பொரத்துதிசெய்தோர்கள்
குரியுடனிருந்தனேக கோக்களைத்தானஞ்செய்தோர்க்
கரிவதாம்சாயுச்சியத்தி லமர்ந்துவாழ்ந்திடுவர்மாதோ.

சம்பூர்ண இராமாயணச்சிந்து முற்றிற்று.

---

எமது கம்பெனியில் பலவிதமான சாமான்களடங்கிய பெரிய கேட்லாக் தேவையானவர்கள் அரையணு ஸ்டாம்பு அனுப்பி அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்—மயிலை-கன்னியப்ப முதலியார்.
நெ-43. கிழவசெட்டி தெருவு, சிந்தாதிரிப்பேட்டை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

முந்துங்கள் ! முந்துங்கள் !!

அருமையான பாடல்கள். வெளியாகிவிட்டது.

# மதுரை சொக்கநாதர்

## பிட்டுக்கு மண்சுமந்த சரித்திரம்.

புலவர்கள் புகழப்பெற்ற முத்தமிழ் க்ஷேத்திரமாகிய திருவாலவாயென்னும் மதுரைமாநகரில் ஸ்ரீசோமசுந்தரக் கடவுள்செய்த 64 - திருவிளையாடல்களில் மிகவும் சிரேஷ்டமானதும், சைவசமயாச்சாரிகளில் ஒருவராகியும், உலகத்தாருய்யும் வண்ணம் தமிழ் வேதமாகிய திருவாசகத்தை தமது திருவாக்கினல் பாடியருளிய ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளின் பெருமையை அரிமர்த்தன பாண்டியன்றியும்பொருட்டு தாமே கூலியாளாய்வந்து, வந்தியென்னும் கிழவியினல் அன்புடனிடப்பட்ட பிட்டைவாங்கி உண்டு அன்னவளின் ஏவுதலால் வைகைக்கி சென்று, மண்சுமந்து, பாண்டியனின் கை பிரம்பினல் அடிப்பட்ட ஷை சரித்திரம், மாயவரம் தாலுக்கா திருவாளொளிபுத்தூர், வித்வசிரோன்மணியென வழங்கும், தங்க மெடல் பரிசுபெற்ற மகாவித்வான், டி. ரு கலியப்பெருமாள் உபாத்தியாயர் அவர்களால் தற்கால நாகரீகத்திற்கேதுவாய் சகல டிராமாடிக் கம்பெனியார்கள் உபயோகித்து உலகத்தார் செவியுடன் நேத்திரானத்தத்தையு மடையுவண்ணம் பலவித இராக தாளங்களுடனும், இனியவசனங்களுடனும் எழுதப்பட்டு உயர்ந்த கடிதத்தில் 4-சித்திரப்படங்களுடன் அச்சிடப்பட்டுள்ளது. இதில், இந்துஸ்தான், பார்சி, திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டுகளடங்கியிருக்கிறது. இதன் விலை அணு 5.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

---

எமது விலாசம்.

**மயிலை-கன்னியப்ப முதலியார்,**

நெ - 43. கிழவசெட்டி தெருவு, சிந்தாதிரிப்பேட்டை,

மவுண்ட்ரோட் மதராஸ்.